<u>அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006</u>

**முன்னிலை : தண்.வசுந்தராதேவி**
**இயக்குநர்**

**ந.க.எண். 242170 /எச்எப் 1/2018** **நாள் : 07 .092018**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – மார்ச்/ஏப்ரல் 2019 – பள்ளி மாணாக்கர் பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணாக்கர் விவரங்களை பதிவேற்றம் செய்தல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

–––––

**<u>ஆணை :</u>**

மார்ச்/ஏப்ரல் 2019 இடைநிலை மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல், EMIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணாக்கரின் விவரங்களைப் பயன்படுத்தியே தயாரிக்கப்படவுள்ளது.

EMIS –ல் உள்ள மாணாக்கரின் தகவல்களுள், கீழ்க்காணும் தகவல்கள் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட உள்ளது.

1. மாணாக்கரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)
2. பிறந்த தேதி
3. புகைப்படம்
4. பாலினம்
5. வகைப்பாடு (சாதி அடிப்படையிலான வகைப்பாடு)
6. மதம்
7. மாற்றுத் திறனாளி வகை
   (மாற்றுத் திறானாளி தேர்வருக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிக்கான தேசிய அடையாள அட்டை இருக்கும் பட்சத்தில், அடையாள அட்டையின் எண்ணை குறிப்பிட வேண்டும்.)
8. கைபேசி எண்
9. பாடத் தொகுப்பு (Group code)
10. பயிற்று மொழி (Medium of instructions)

மாணாக்கரின் மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பயன்படுத்தியே, மார்ச்/ஏப்ரல் 2019 இடைநிலை மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட உள்ளதால், அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும், **10.09.2018 முதல் 22.09.2018 வரையிலான** நாட்களில் EMIS –ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password – ஐ பயன்படுத்தி, EMIS Portal-ல் சென்று தங்களது பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களின் மேற்குறிப்பிட்ட விவரங்களையும் பதிவேற்றம் செய்யவேண்டும். பள்ளியில் மாற்றுச் சான்றிதழ் வழங்காமல் உள்ள, நீண்ட காலம் விடுப்பில் இருக்கும் மாணாக்கரது விவரங்களையும் கண்டிப்பாக பதிவேற்றம் செய்யவேண்டும்.

..2

## பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வெழுதவுள்ள மாணாக்கரின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் தொடர்பான அறிவுரைகள்

**1. மாணாக்கரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)**

மாணக்கரின் பெயரை ஆங்கிலத்தில் பதிவு செய்ய 34 எழுத்துக்கள் எழுதும் வகையிலும், தமிழில் பதிவு செய்ய 45 எழுத்துக்கள் எழுதும் வகையிலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெயர் முதலிலும், அதனைத் தொடர்ந்து தலைப்பெழுத்தும் இடம்பெறும் வகையில் மாணவரது பெயர் இருக்க வேண்டும். பெயருக்கும் தலைப்பெழுத்துக்கும் இடையில் (Between name and initial) ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும் (புள்ளி வைத்தல் கூடாது). இரு தலைப்பெழுத்துக்கள் இருப்பின் இரு தலைப்பெழுத்துக்களுக்குமிடையே ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும். **மாணவரது பெயரை தமிழில் பதிவேற்றம் செய்யும் போது தலைப்பெழுத்தும் தமிழில் இருக்க வேண்டும். உதாரணமாக, மாணவரது தந்தையின் பெயர் கண்ணன் எனில், தலைப்பெழுத்து <u>க</u> என இருக்க வேண்டும்.**

**2.** <u>பிறந்த தேதி</u>

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினைப் பொறுத்தவரை, மாணவரின் பிறந்த தேதியினை பிறப்புச் சான்றிதழுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிய வேண்டும். **தேர்வர்கள் மார்ச் 2019 முதல் நாள் (01/03/2019) அன்று கண்டிப்பாக 14 வயது நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், பிறந்த தேதி மாற்றம் கோருவோரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.**

**3. புகைப்படம்**

சமீபத்தில் எடுக்கப்பட்ட மாணவரது புகைப்படத்தை மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும். புகைப்படம் வெள்ளை நிறப் பின்னணியில் (White Background) எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**மேலும், பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் அனைத்து தேர்வர்களும் பகுதி I ல் தமிழ் மொழியை மட்டுமே மொழிப்பாடமாக எழுத அனுமதிக்கப்படுவர்.**

## <u>மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வெழுதவுள்ள மாணாக்கரின் விவரங்களைப் பதிவேற்றம் செய்தல் தொடர்பான அறிவுரைகள்</u>

1. **<u>மாணாக்கரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் பிறந்த தேதி</u>**
   மாணாக்கரின் பெயர் மற்றும் பிறந்த தேதி ஆகியவை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறு மட்டுமே இருக்கவேண்டும். **தேர்வர்கள் மார்ச் 2019 முதல் நாள் (01/03/2019) அன்று 15 வயது நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.** இதில் ஏதேனும் தவறு இருப்பின் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்.

2. **<u>புகைப்படம்</u>**
   சமீபத்தில் எடுக்கப்பட்ட மாணவரது புகைப்படத்தை மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும். புகைப்படம் வெள்ளை நிறப் பின்னணியில் (White Background) எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

3. **<u>பாடத்தொகுப்பு</u>**
   மேல்நிலை முதலாமாண்டு ஆண்டு மாணவர்களுக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பாடத்தொகுப்பிற்கும் தற்போது புதிதாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடத்தொகுப்பு எண்ணை மட்டுமே குறிப்பிடவேண்டும்.

பெயர் பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படும் என்பதால், இப்பணியினை தலைமையாசிரியர் தமது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும், சிரத்தையுடனும் மேற்கொள்ள வேண்டும். **பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் ஏதும் ஏற்படின் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதுடன், அவர்கள் மீது துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.**

**22.09.2018 தேதிக்குப் பிறகு, பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளி மாணவர்கள் பட்டியலில் கூடுதலாக மாணவர்கள் பெயரை சேர்ப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது.**

மேலும், மேற்குறிப்பிட்டவாறு பதிவேற்றம் செய்த விவரங்களை சரிபார்த்து, இடைநிலை மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப்பட்டியல் பட்டியல் தயாரிப்பதற்கு தேவைப்படும் **<u>கூடுதல் விவரங்களான மொழிப்பாட விலக்கு, செய்முறைத் தேர்வு விலக்கு கோரும் மாற்றுத் திறனாளிகள், விருப்ப மொழிப்பாடத்தில் தேர்வு எழுதும் மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்வதற்கான தேதிகள் குறித்த விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.</u>**

மார்ச் 2019 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுக்கான பெயர்ப்பட்டியல் மார்ச் 2018 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுக்காக கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்படும். 2018–2019 கல்வியாண்டில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு படிப்பினை வேறு பள்ளியில் தொடரும் மாணவர்களின் விவரங்களை, பெயர்ப்பட்டியலில் திருத்தம் செய்ய பின்னர் வாய்ப்பு வழங்கப்படும்.

ஒம்/–
**இயக்குநர்**

**பெறுநர்:**

1. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
4. அனைத்து அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர்கள்